## தமிழர் ஐக்கிய தேசிய அமைப்பு – ஐக்கிய இராச்சியம்.

**நோக்கங்களும், செயற்பாடுகளும்**

**அன்பார்ந்தவர்களே!**

இன்று எமது தாயகத்து உறவுகள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து தினமும் கவலையுடன் நாங்கள் எல்லோரும் வாழ்வதை நாம் அறிவோம். அது மட்டுமல்ல, பிரச்சனைகள் மிகவும் அதிகரித்துச் செல்லும் வேளையில் அதற்கான மாற்றுத் தீர்வுகளை நோக்கிச் செல்வது மிகவும் சிக்கலாகி வருவதோடு, அனைவரையும் ஒன்றாக இணைப்பது மிகவும் சிக்கலாகி வருகிறது. இவ்வாறான நிலை தொடர்வதை எந்தத் தமிழ் மகனும் வெறுமனே பார்த்துச் செயலற்று இருக்க முடியாது.

குறிப்பாக தாயகத்தில் தமிழ் மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் அமைப்புகளிடையே ஐக்கியம் குன்றி பிளவுகள் அதிகரித்துச் செல்வதும் அவற்றைப் பயன்படுத்தி இனவாத சக்திகள் மேலும் இடைவெளிகளை அதிகரிக்கும் வகையில் சூழ்ச்சி அரசியலைத் தொடர்வதும் மிகவும் கவலை தருகிறது.

இந் நிலையில் புலம்பெயர் மக்களின் தார்மீக ஆதரவையும், நிதி உதவிகளையும் பெருமளவில் பெற்றுச் செயற்பட்டு வரும் இந்த அரசியல் அமைப்புகளிடையே குறைந்த பட்ச ஐக்கியத்தை உருவாக்குவதாயின் புலம்பெயர் மக்கள் அதற்கான காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமென்பதை நீங்கள் அறிவீர்கள்.

அதன் அடிப்படையில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளிடையே இணைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் தாயக அரசியல் அமைப்புகளிடையே குறைந்தபட்ச ஒற்றுமையை ஏற்படுத்தவும், அதே வேளையில் ஏனைய சிறுபான்மைத் தேசிய இனங்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தவும் காத்திரமான சில முயற்சிகளை எடுக்கும் நோக்கில் எம்மில் சிலர் இணைந்து “தமிழர் ஐக்கிய தேசிய அமைப்பு” ஒன்றினைத் தோற்றுவித்துள்ளோம்.

தற்போது தமிழ்க் கட்சிகள் சில இணைந்து அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த சம்மதம் தெரிவித்துள்ள நிலையில் இக் கட்சிகள் மத்தியில் தொடர்ச்சியான ஐக்கியத்தை உறுதி செய்யவும், பேச்சுவார்த்தைகளில் விட்டுக் கொடுக்காத வகையில் செயற்படவும் புலம் பெயர் மக்களின் பலமும், அழுத்தங்களும் அவசியமாகின்றன.

அந்த வகையில் புலம்பெயர் தமிழர்களாகிய நாம் ஒரு புறத்தில் பலமான கட்டமைப்பைத் தோற்றுவிக்கும் அதே வேளையில் தாயகத்து அரசியல் கட்சிகளின் மத்தியில் இறுக்கமான ஐக்கியத்திற்காக உழைக்கவும் எம்மைத் தயாராக்கி வருகிறோம்.

தற்போதுள்ள அரசியல் சூழலில் நாம் தொடர்ச்சியாக எமது நீண்டகால அரசியல் நோக்கங்களை அல்லது கோரிக்கைகளை வற்புறுத்திய போதிலும் அவற்றில் காத்திரமான மாற்றங்கள் ஏற்படாதது மட்டுமல்ல, இருக்கும் நிலமைகளையும் பறி கொடுக்கும் சூழல் ஏற்பட்டு வருகிறது. இந்த ஆபத்தைத் தடுப்பதும் இன்றைய தேவையாக உள்ளது.

எனவே, தற்போது முன்வைக்கப்படும் அவசர தீர்வுகளாக

- **நீண்ட காலமாக விசாரணையின்றி சிறையில் வாடும் எம்மவர்களை எவ்வித நிபந்தனையுமின்றி விடுவிக்க வேண்டுமென இலங்கை அரசை வற்புறுத்துவதோடு, இவ்வாறான அப்பட்டமான மனித உரிமை மீறலை சர்வதேச அரங்கத்திற்கு எடுத்துச் செல்வதும் தேவையாகிறது.**
- **வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பு என்ற போர்வையில் பல தனியார் காணிகள் கையகப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளதோதோடு, அரச காணிகள் பலவும் அப் பிரதேச மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படாமல் சம்பந்தமில்லாத பலருக்குச் சட்ட விரோதமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கையை நிறுத்தும்படி கோருகிறோம்.**
- **புதைபொருள் ஆய்வு என்ற பெயரில் ஆலயங்களுக்குச் சொந்தமான காணிகள் கையகப்படுத்தப்படுவதோடு, அங்கு பௌத்த விகாரைகளும் நிறுவப்படுகின்றன. இச் சட்டவிரோத நடவடிக்கைகளை நிறுத்தும்படி கோருகிறோம்.**
- **வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேவைக்கு அதிகமாக ராணுவம் குவிக்கப்பட்டுள்ளதோடு, அப் பிரதேசம் ராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசமாகவும், மக்கள் சுதந்திரமாக தமது காரியங்களை மேற்கொள்ள முடியாதவாறு உளவு நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதை நிறுத்தி தற்போது நாட்டில் நிலமைகள் அமைதியாக இருப்பதால் ராணுவத்தின் இருப்பைக் குறைக்கும்படி கோருகிறோம்.**
- **பல்வேறு காரணங்களைக் காட்டி சட்ட விரோத குடியேற்றங்கள் இன்னமும் தொடர்கின்றன. இச் சட்ட விரோத குடியேற்ற நடவடிக்கைகள் அமைதிப் பேச்சுவார்த்தைக்குச் சாதகமான சூழலைத் தரப் போவதில்லை. எனவே திட்டமிட்ட குடியேற்ற முயற்சிகளைக் கைவிட்டு உடனடியாக ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைக்குத் தயாராகுமாறு அரசை வேண்டுகிறோம்.**

எமது இந்த நன் முயற்சிக்குப் பலரும் ஆதரவு தருமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

## தமிழர் ஐக்கிய தேசிய அமைப்புடன் கீழுள்ள இணையத்தள முகவரியுடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்

**Contact@tamilunited.org**

**ஊடக அறிக்கை 20.04.2023**